# Deposition of Witness

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## In the Court of Judicial Magistrate No.III Cuddalore.

Case Number : C.C.24/ 2015
Police Station : Thiruppapuliyur- P.S
Deposition of witness for Prosecution: LW12/ PW11
Name : Saravanan(Doctor)
Father Name/Husband Name : Subramaniyan
Cuddalore :
Taluk :
Caste :
Calling :
Religion :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 22.06.2023 நாளாகிய இன்று திரு. ஜி. இரகோத்தமன், M.A.,L.L.B., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதன்மை விசாரணை:**</u>

1. நான் தற்போது விழுப்புரம் மருத்துவகல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடலூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 15.08.2013 அன்று 10.45 மணியளவில் திருப்பாபுலியூர் உதவி ஆய்வாளர் முதல்நிலை காவலர் ஏழுமலை என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதத்தை பெற்று குற்ற எண்.376-2013 என்ற வழக்கில் இ.த.ச.பிரிவு 304(ஏ) விபத்தில் இறந்துபோன திரு.ஓம்சக்திவேல் வயது-31 பிரேதத்தை பிரேத பரிசோதனை மேற்கொண்டேன்.

அவரது அடையாளங்கள்.

1. இடது கையில் காயத்தழும்பு
2. வலது தலையில் காயத்தழும்பு

மேற்படி திரேக பரிசோதனை காலை 10.55 மணியளவில் தொடங்கியது. அவர் உடல்நிலை நல்ல நிலையில் காணப்பட்டது.

**<u>வெளிப்புற காயங்கள்</u>**

1. வலது காதில் கிழிந்த காயம் 6X3X1 செ.மீ அளவில் காணப்பட்டது.
2. மார்பில் சிராய்ப்பு காயம் 8X4X1 செ.மீ அளவில் காணப்பட்டது.
3. முகத்தில் சிராய்ப்பு காயம் 6X2X1 செ.மீ அளவில் காணப்பட்டது.

**<u>உட்புற காயங்கள்</u>**

1. கல்லீரல் மற்றும் மண்ணீரல் நுரையீரல் வெளிறி காணப்பட்டது.
2. தலையில் வலது பெரைட்டல் எலும்பு உடைந்து காணப்பட்டது.
3. தலையில் ரத்தக்கட்டுகள் காணப்பட்டது. அதன் அளவு 50 மி.லி.

பிரேத பரிசோதனை 12.05 மணியளவில் முடிவுற்றது. மேற்படி பிரேத பரிசோதனை செய்ததில் அவர் ரத்தப்போக்கினாலும் அதனால் ஏற்பட்ட உள்ளுறுப்பு காயங்களால் இறப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று சான்றுரை வழங்கினேன். இறந்த நபர் 6 மணியிலிருந்து 48 மணிநேரத்திற்கு முன்பு இறந்திருக்கலாம் என்று சான்றுரை வழங்கினேன். **(15.08.2013 தேதியிட்ட நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை என்று சொல்லப்பட்டது.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down by me Certified that
contains a true and correct
statement made by the Accused
read over and admitted by
the / him to the correct.

Sd/- G.Ragothaman, M.A.L.L.B.,
Judicial Magistrate No.III,
Cuddalore.